மாங்கொட்டை

குடிசையின் ஓட்டை வழியாகச் சூரிய ஊசி கண்ணில் வந்து பாய்ந்து கொண்டிருந்தது. தையற்காரன் வீரமுத்துக்கு ஊசிக் குத்து ஒன்றும் பிரமாதமாய் இல்லை. தொழிலுக்கு அது நாற்றங்கால். ஆனால் கண் நாற்றங்காலாக இருக்க ஒப்பவில்லை. மூடி மூடிப் பார்த்தது. இல்லாததற்காக இல்லையே என்று அழுது கொண்டிருந்தவன், இருப்பதற்கும் வேறு கஷ்டப்பட வேண்டுமா என்று தோன்றிற்று. முக்கி முனகி, படுத்திருந்த இடத்தை விட்டுச் சுவரோரம் நகர்ந்து படுத்துக்கொண்டான்.

அந்த நேரத்தில் குடிசையில் அவனையும் அவனுடைய ஆஸ்துமாவையும் வெறுமையையும் தவிர வேறு யாரும் எதுவும் இல்லை திணறடி ஆஸ்துமாத் தாக்குதலிலிருந்து கொஞ்சம் விடுபட்டுத் தாராளமாக மூச்சுவிட்டுக் கொண்டிருந்தான். அந்த இடைவெளியில்தான் சூரிய ஊசி குத்தியதே தெரிந்தது நாக்கில் பொட்டல் வறட்சி. ஒரு வாய் டீ. வெந்நீர் ஒரு வாய் கொடுக்கக்கூட நாதி இல்லை.

தறிதலையாய் இருந்தவன் இருந்திருந்தால்கூட ஒரு மாதிரியாக இருந்திருக்கும். வீடு கூட்டி வேலைக்குப் போன வளை அவர்கள் விட்டால்தானே? அவள் வந்து மூக்கால் அழப்போகிறாள். பொய் சொல்லமாட்டாள். நல்லவன்! நல்லவர்கள் யாருக்கு வேண்டும்? எதைக்கொண்டு நல்லவர்கள், கெட்டவர்கள்? வீட்டுக்காரன்கூட நல்லவன்தான்.

பேசுகிறனு, பார்க்கிறனு? ஊமை - வாடகை கேட்பதைத் தவிர. குருடு-குப்பை கூளம் தெரிவதைத் தவிர. அவளும் நல்லவள்தான். அவனைக் கட்டிக்கொண்டு ஓயாமல் உழைத்து உழைத்து ஓடாகிறுள். அவன் மட்டும் கெட்டவனு?

பேர் முதற்கொண்டு நன்றுகத்தான் இருந்தது—சுந்தரம். சுந்தரமான வேலை. அடாவடி இல்லை. வெயில் மழை தொந்தரவில்லை. நிழலில் காலாட்டிக்கொண்டு இருந்தால் போதும் வேலையைப் பார்க்கிறதா, மூஞ்சியைப் பார்க்கிறதா? நல்ல பேரை மாங்கொட்டை ஆக்கினர்களே - படுபாவிகள். வைத்த பேர் விழுந்து விட்டது. மச்சம்போல இது ஒட்டிக்கொண்டு விட்டது. மாங்கொட்டை இல்லாதுபோனல் மரமேது? காதர், பீதர், பெங்களூரா, கிளிமூக்கு, தாடிப்பசந்து...மாங்கொட்டை குழம்பு வயிற்று நோய்க்கு நல்ல மருந்து.

நாக்கு ஒட்டிக்கொண்டது. நகர்ந்து அடுப்பைப் பற்ற வைக்கலாம் என்றுல் அடுப்புப் புகையிலிருந்து அமுக்குப் பிசாசு வந்துவிடும். அவளாவது வந்தால்...! என்ன மணியோ?

வாசலில் யானை மணியோசை மாதிரி காலடிச் சத்தம் கேட்டது. ஆயாடி, நல்ல வேளை, வந்துவிட்டாள்! ஒரு வாய்.

ராஜாத்தி உள்ளே வந்து கையில் இருந்த மாஞ்சுள்ளிக் கட்டைத் தொப்பென்று போட்டுவிட்டு முன்றுனைத் தலைப்பால் முகத்தைத் துடைத்துக்கொண்டு எதிரே குந்தி உட்கார்ந்தாள்.

''என்னுங்க, எப்படி இருக்கு? மறுபடி வந்துச்சா?''

''வாசல்லே போய் எட்டி எட்டிப் பார்த்தூட்டு வராப் போல வருது போகுது! ஏன் இத்தினி நேரம்?''

"நேரந்தான் ஆயிடுச்சு. ஊட்டு வேலைங்களை எல்லாம் முடிச்சுக்கிட்டு - பிள்ளைங்களை எல்லாம் பள்ளிக்கூடத்திலே கொண்டுபோய் வுட்டுட்டு - போகட்டுங்களான்னு கேட்டேன்."

" 'ராஜாத்தி நம்ப ரோஸ் இருக்கு பாரு - ராத்திரி எல்லாம் நல்லா இருந்துச்சு. காலையிலே இருந்து மூணு காலாலே நடக்குது. தோட்டத்து முள்ளு கிள்ளு இருக்குமோன்னு பார்த்தேன். இல்லை. கால் வீங்கிக்கிட்டிருக்குது. அதைக் கொண்டுபோய் மாட்டு ஆஸ்பத்திரியிலே காட்டிக்கிட்டுக் கொஞ்சம் வர்றியா? நம்ப ஊடுன்னு டாக்டர் கிட்டே சொல்லுன்னுங்க. ஏளு ரூவா குடுக்கிற ஊடாச்சே. அது இது கணக்குப் பாக்காமெ குடுக்கிற ஊடாச்சேன்னு ஆஸ்பத்திரிக்குப் போனேன். டாக்டரைப் பார்த்துக் கம்பவுண்டரை வேப்பிலை அடிச்சுத் திரும்பறத்துக்கு இவ்வளவு நாளி ஆயிடுச்சு."

"நான் கிடக்கிறேனே. நாக்கு உலந்து போவுது. ஒரு வாய் டீ. வேண்டாம். ஒரு வாய் வெந்நீர் தர நாதி இல்லை. இந்த ஊட்டுக்காரன் ஒரு பாவிப் பயல். எங்கெ படுத்தாலும் கண்ணைக் குத்துது. ஒரு பக்கம் இருமல். ஒரு பக்கம் வேக்குது. தண்ணித்தாகம். ஒரு வாய் வெந்நீருக்கு வழி இல்லே."

"இதோ..." - கொண்டுவந்த கட்டிலிருந்து இரண்டு சுள்ளியைப் பிடுங்கி வைத்து அடுப்பை மூட்டினாள். காட்டேரி மாதிரி சுள்ளி எரிந்தது. சின்னப்பானைத் தண்ணீரை அடுப்பில் ஏற்றினாள். காட்டேரியின் தலைமயிர் காற்றில்லாமல் பறந்துகொண்டிருந்தது.

பயலும் கோரை மயிர் பறக்க ஓடிவந்து கொண்டிருந்தான். அவர் துரத்திக்கொண்டு வந்துகொண்டிருந்தார். அவன் வந்து அவளுக்குப் பின்னால் ஒளிந்து இடுப்பை வளைத்துக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டான். ஒளிந்து கொள்கிறாயா என்று ஓங்கின அடி அவள் மேலே விழுகிறது.

"ஏங்க ?"

"திருட்டுக் கழுதை! கெடியாரத்தைத் திருடிவிட் டான். பட்டம்மா வந்து குய்யோ முறையோன்னு கடை யிலே வந்து கூத்தாடுது. பட்டம்மா ஊட்டிலே ரவிக்கை யைக் குடுத்தூட்டுக் காசை வாங்கிட்டு வாடான்னேன். இவன் வந்தூட்டுப் போன பொறவு அவுங்க ஊட்டுக் கைக்கடியாரம் காணுமாம். இவன்தான் எடுத்திருக்கணும் கழுங்க. வேறெ யாரும் வல்லியாம். இல்லேன்னுட்டு ஓடி யாந்தூட்டான். அவன் இல்லாட்டி ஏன் ஓடியாருன்? நீ நகரு, சொல்றேன்."

"ஏண்டா, எடுத்தியா ?"

"இல்லேம்மா. சத்யமா எடுக்கல்லே."

"நெசத்தைச் சொல்லு."

"நெசம்மா இல்லே."

"ஒனக்குத் தெரியாது. நீ நகரு. நெசம் தெரியும் பாரு."

"நீங்க ஒண்ணு சும்மா. யாராவது சொன்ஞத் தலையை விரிச்சுக்கிட்டு ஆடுவீங்க. எத்தினி வாட்டி அவனைச் சாக மாட்டாமெ அடிச்சிருக்கீங்க ?"

"ரொம்ப நல்லவன்தான். எனக்குத் தெரியும். அவன் தான் எடுத்துக்கிட்டு வந்திருக்கான்."

"இருக்கட்டும். ஒங்களுக்குக் குறளி வந்து சொல்லுது. நான் அப்புறம் கேக்கறேன்; நீங்க கடைக்குப் போங்க. கடை நடத்தற லட்சணந்தான் தெரியுதே !"

கோபமாக இடி லேசாக உருண்டதுபோல இருந்தது. அவள் திடுக்கிட்டுப் பார்த்தாள். அடுப்புத் தீ அமுங்கி வாயில் நுரைமாதிரி நீற்றுக்கிடந்தது. அப்பொழுதுதான் திக்கென்று அடுப்பில் இருக்கும் தண்ணீர் நினைவுக்கு

7

வந்தது. வெந்நீரில் விரலை வைத்துப் பார்த்தாள். தரையி லும் தண்ணீரிலும் கிடக்கும் உடம்புமாதிரி தண்ணீர் இருந்தது.

"அரை மணியாவா ஒரு வாய் வெந்நீர் வைக்கெறெ?"

"எல்லாரையும் வெரட்டறாப்போல தண்ணியை வெரட்ட முடியுமா? தண்ணி காயுது. இதோ கொண்டாரேன்."

வாயை உப்பிக்கொண்டு தீவிரமாக அடுப்பை ஊதி எரிய வைத்து ஐந்து நிமிஷத்தில் வெந்நீரை மாங்கொட்டை முன் கொணர்ந்து வைத்தாள்.

மௌனமாக வெந்நீரை எடுத்துக் குடித்தான், ஆயாசம்; ஒரு விநாடி சுவரில் சாய்ந்துகொண்டான். மறு படி வெந்நீரைக் குடித்துவிட்டுச் சுகமாகக் கண்ணை மூடிக் கொண்டு சுவரில் திரும்பச் சாய்ந்தான். சுகம் வெடித்து விட்டதுபோல அவன் உலுக்கி விழுந்து நிமிர்ந்து உட்கார்ந்தான்.

"நானு அவனை வெரட்டினேன்? பேச்சுப்பேசறே. நல்லவன் என்கிறே. திருடல்லேன்னு சத்யம் பண்ணினான். அப்பறம் உன்கிட்டேயே கெடியாரத்தைக் கொண்டு வந்து கொடுத்தானே அரிச்சந்திரன்-மறந்து போச்சா உனக்கு? தறுதலை. பேரைக் கெடுக்க முளைச்சான். ஓடிப்போய் குட்டிச் சுவத்துக்கிட்டெ தானே நிக்கிற கழுதை-அதை நான் வெரட்டுவானேன்?"

ராஜாத்தி பேசவில்லை. தான் ஏதோ குற்றம் செய்தது போல முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு பாத்திரத் துடன் நகர்ந்தாள்.

மாங்கொட்டை திரும்பச் சுவரோரம் சாய்ந்துகொண் டான். மூடின கடை முன்னே தெரிந்தது. தனக்குத் தானே உதடுகளை அசைத்துக் கொண்டான்.

"இன்னும் கொஞ்சம் தண்ணி வேணுமா?" என்று ராஜாத்தி திரும்ப வந்து கேட்டதும் உதட்டசைவு வார்த்தைகளாய் விட்டன.

"நானா அவனை வெரட்டினேன்? நெனைச்சுப்பாரு. அந்தக் கடியாரத்தை உன்கிட்டெ யார் கொடுத்தா-நெனைச்சுப் பாரு?"

"அடுத்த தெரு சந்நாசி கிட்டே இருந்து வாங்கியாந்து கொடுத்தான். அவன் தான் எடுத்தானும்."

"நீ சந்நாசியைக் கேட்டியா?"

"நல்லாப் போய்க் கேப்பேனே. அவுங்க ஆயா தாய்ப் பூனை மாதிரி சீறிக்கிட்டு விழமாட்டாங்களா? கெடியாரம் கெடச்சுப்போச்சு. உடைமைக்காரங்ககிட்டெ கொடுத்துட்டங்க. கொளுக்கட்டை வெந்து போச்சு. தின்னாச்சு. ஏன் சும்மா அதுக்கு நொள்ளை சொல்றீங்க?"

ராஜாத்தி போகிற பாதையும் தான்போகிற பாதையும் ஒன்று என்று மாங்கொட்டைக்குத் தெரியவில்லை. ஆனால் அவள் பையன் போகிற பாதையிலும் போகவில்லை என்று மட்டும் தெரிந்தது. அப்படி இருந்தால் இத்தனை நாள் பங்களாக்காரர்கள் விரட்டி யிருப்பார்கள். தனக்குப் பெண்ஜாதி. ஆனால் அவனுக்கு அம்மா. அதற்கு மேல் மாங்கொட்டைக்குப் பேசவரவில்லை. நாக்கிலும் உதட்டிலும் வறட்சி. தண்ணீர் இன்னும் ஒரு வாய்வேண்டும் இருந்தாலும் குருட்டு ஆத்திரம்; "தண்ணியும் வேணும் மண்ணும் வேணும். சோறுக்குவதைப் பாரு."

சோறுக்கத்தான் போனாள்.

மாங்கொட்டை சுவரோரம் படுத்துக்கொண்டான். ஆனால் அவனை எதுவோ ஒன்று துரத்திக்கொண்டே இருப்பது போலிருந்தது. இங்கும் ஒரு சூரிய கிரணம் வந்து கண்ணைக் குத்திற்று. தள்ளிப் படுத்துக்கொண்டான்.

கிரணம் இல்லையாகக் கடிகாரம் போல் தரையில் கிடந்தது. கண்ணை மூடிக்கொண்டான். அவனை விரட்டிக்கொண்டிருந்த நினைப்புகள் ஒன்றின்மேல் ஒன்றாக வந்து விழுந்து கொண்டிருந்தன. கழுதை எங்கே போயிருக்கும்?

ராஜாத்தி சோறுக்கப் பானையை அடுப்பில் ஏற்றினாள். சோறு வெந்துகொண்டிருந்தது. அவளும் வெந்துகொண்டிருந்தாள். இந்தக் கழுதை எங்கேதான் போய்த் தொலைந்திருக்கும்?

அப்பொழுது "மாங்கொட்டை!" என்று ஒரு குரல் வாசலில் கூப்பிட்டது. மாங்கொட்டை கண்ணைத் திறந்துகொண்டு காதை நெரித்தான். எழுந்திருப்பவனாகத் தெரியவில்லை. அவள் எழுந்துபோய்ப் பார்ப்பதற்குள்ளேயே மீசையைத் தடவிக்கொண்டே சங்கிலி உள்ளே வந்து மாங்கொட்டைக்கு அருகில் உட்கார்ந்தான்.

"என்ன, படுகிடையா விழுந்திட்டியா? கடை நாலஞ்சு நாளாக் காணுமே, பாப்போம்னு வந்தேன்."

"பெரிய பிசாசுவந்து ஒரு வாரமாச்சே. கடையாவது மண்ணாவது! தெறந்தா மட்டும் குபேரன் கலசம் கட்டிப் புடறானா?"

"அது சரி. இந்தப் பய சமாசாரம்?"

"கோடாலிக்காம்பு. நானே ஒழிச்சுடணுமுனு நெனைச்சேன். அவனா ஒழிஞ்சுபூட்டான்."

"தவுட்டுக்கு வாங்கினாப்போல பேசிறியோ? எனக்குத் தெரியும்-அவன் போனதுதான் ஒன்னைப் படுக்க வச்சூட்டுது."

அடுப்பண்டை இருந்தவள் பேய்க்காற்றுப்போல வந்தாள்.

"அவரு கிடக்காரு. எதுனாச்சும் உங்களுக்குத் தெரியுதா ?"

"இன்னிக்குத்தான் கொஞ்சம் தெரிஞ்சுது. நடுத்தெருப் பயல் ஜோசப் சொன்னான். அந்தப் பங்களாத் தோட்டம் இருக்குப் பாரு.அங்கே போய் இவன்கள் எல்லாம் மாங்காய் அடிப்பான்களாம். இதே வேலை. அன்னிக்குப்போய் அடிச் சிருக்கானுங்க. ஒரு கல்லு ஊட்டுக்குள்ளாரப் போய் ஒரு குழந்தைப்புள்ளை மேலே விழுந்திருக்கு. பங்களாக்காரர் ஆளைவைச்சுப் புடுச்சு, பயல்களை எல்லாம் போலீஸ் ஸ்டேஷனுக்குத் தள்ளிகிட்டுப் போயிட்டாரு. சப் இன்ஸ்பெக்டர் இந்தப் பயல்களை எல்லாம் விசாரிச்சாராம். அவனவன் விலாசம் சொன்னானுக. நான் எறியல்லே, நான் எறியல்லே, இவன்தான் இன்னு எல்லாரும் ஒன் மவனைச் சொன்னுங்களாம். உன் மவனை நீ யாருன்னு சப் இன்ஸ் பெக்டர் கேட்டா, அப்பா அம்மா இல்லேன்னுட்டானும். யார்ரா கல்லெறிஞ்சான்னு நான்தான் இன்னுட்டானும். எங்கேடா இருக்கேன்னு, எங்கியும் இல்லே, எல்லா இடத் திலேயுந்தான் இன்னுனும். எப்படிச் சாப்பிடறேன்னு பிச்சை எடுக்கிறேன், இல்லாட்டி எதுனாச்சும் வேலை செய்யறேன், இன்னுனும்."

"படுபாவிப் பய! என்ன நெஞ்சழுத்தம் பாருங்க. அப்புறம்-"

"சப் இன்ஸ்பெக்டர் அப்புறம் அவனை வச்சுக்கிட்டு இவனுகளுக்கெல்லாம் ஆளுக்கு ஒரு பூசை போட்டு வீட்டுக்கு விரட்டிட்டாராம். இவனை என்ன செஞ் சாருன்னு தெரியல்லே."

"ஜெயில்லே போட்டிருப்பாரா ?"

"அதெல்லாம் இருக்காது. சீர்திருத்தப் பள்ளி, அநாதை விடுதி எங்கேனாச்சும் அனுப்பிச்சிருப்பாரு."

"எந்தச் சப் இன்ஸ்பெக்டர்? நான் போய்க் கேக்கறேன்."

"அதெல்லாம் அந்தப் பயல்களுக்குச் சொல்லத் தெரியல்லே."

"இதெல்லாம் சுத்தப் பொய். இருக்காதுங்க. எங்க ஊட்டுக்காரர் மாதிரி இந்தத் தெருப் பயல்களுக்கும் இவனைக் கண்டா ஆகறதில்லே."

"சந்நாசி நல்ல பயலாச்சே. பொய் சொல்லமாட்டான்."

"கெட்டிக்காரனைக் கண்டா நல்லவனுக்குப் பிடிக்காதுங்க. இவன் கொஞ்சம் துடி, அடாவடி. ஒண்ணுன்னு ஒன்பது சொல்லியிருப்பானுக, இருக்கட்டும். சப் இன்ஸ் பெக்டர் யாருன்னு விசாரிக்கிறீங்களா?...ரெண்டு மாச மாச்சு-சரியாச் சோறு தின்னு, தூங்கி. விசாரிங்க."

"அந்தக் கழுதை வந்தா இனிமே நான்-" என்று மாங் கொட்டை சொல்ல வந்ததை முடிக்க முடியவில்லை.

ஒரு போலீஸ்காரர் வீட்டுக்குள் நுழைந்தார். மாங் கொட்டை நடுங்கிப் போய்விட்டான். ராஜாத்தியோ ஏதோ நம்பிக்கை பிறந்ததுபோல முகம் மலர்ந்தாள்.

"சுந்தரம்னு இருக்காரா?"

மாங்கொட்டை வாய் திறக்கவில்லை. சங்கிலிக்கு வாயைத் திறக்க இஷ்டம். ஆனால் மாங்கொட்டை சும்மா இருந்ததைப் பார்த்து அவனும் சும்மா இருந்துவிட்டான். ராஜாத்தி மாத்திரம் பொங்கிக்கொண்டு வாய்திறந்தாள்.

"இருக்காரு - இவுங்கதான்."

"நீங்க-?"

"நான் அவரு—"

"ஒங்க பயல் பலே வேலே செஞ்சுப்'புட்டான்."

ராஜாத்திக்குத் திகில். கண்ணில் ஜலம். பயத்தில் வாய் வரவில்லே.

"அப்பா அம்மா இல்லவே இல்லேன்னு கேட்டா சொல்லிவிட்டான். மேலே இருக்கிறவங்க முழிச்சுப் போனுங்க."

பயத்திலும் ஒரு கவலே.

"இப்பொ எங்கே இருக்கானுங்க?"

"நல்லாத்தான் இருக்கிருன். துடிப் பயல். பொழைச்சுக்குவான். இந்தத் தையல் வேலே எங்கே இவ்வளவு நல்லாக் கத்துக்கிட்டான்?"

ஊமையைப்போல் வாய் திறக்காமல் விழித்துக் கொண்டிருந்த மாங்கொட்டை மனத்தில் ஒரு கர்வம் திமிர்ந்தது. முகத்தில் ஓர் அசட்டுச் சிரிப்பு வழிந்தது.

"என் கடையிலேதானுங்க."

"உங்களுக்குத் தையல் கடையா! பின்னே ஏன் அவனே வேலே செய்ய விடமாட்டேங்கிறீங்க?"

"நானு உடமாட்டேங்கறேன்? அவன்தான் தறுதலேயாய்ப் போருன். வாரான். இப்பொ பாருங்களேன். ஊட்டை விட்டுப்போய் ரெண்டு மாசமாவுது. எங்கே போனுன், என்ன ஆனுன்னே தெரியலே. ஆமா, இருக்கான்னீங்களே.''

''பங்களாத் தோட்டத்திலே பயலுங்க எல்லாம் மாங்காய் அடிச்சான்னுங்களாம், ஒரு கல் ஊட்டுக்குள்ளார விளுந்து ஒரு குழந்தை மண்டையைப் பொத்துப்பிடிச்சு. பங்களாக்காரரு சப் இன்ஸ்பெக்டர் கிட்டே கொணுந்து இவங்களே எல்லாம் நிறுத்திப்பிட்டாரு. அவரு ஆளுக்கு நாலு உதை குடுத்து வெறட்டிப்பிட்டாரு. ஒன் மவன் அடியை வாங்கிக்கிட்டு வெறைச்சாப்பிலே பேசினுன்.

உனக்கு அப்பன் ஆயா யாருடான்னு, ஒத்தரும் இல்லே னுட்டான். எந்தத் தெருவுன்னு டவுன் பூராத்தான்னுன். அவருக்கு இவனே என்ன பண்றதுன்னு புரியலே, மாஜிஸ் திரேட் கிட்டே சொல்லிச் சீர்திருத்தப் பள்ளிக்கு அனுப் பிச்சுட்டாரு. இரண்டு மாசமா அங்கேதான் இருந்தான். இன்னிக்கு அவனெத் திருப்பி அனுப்பிச்சூட்டாங்க."

"அவன் இங்கே வரலிங்களே" ஆத்திரத்தில் குறுக் கிட்டாள் ராஜாத்தி.

"சொல்றேன் கேளு: அங்கே இருந்தப்பொ இவனுக்கு அப்பா அம்மா இருக்காங்கன்னு அந்த சூபரிண்டெண் டுக்குத் தெரிஞ்சு போச்சு. என்னவோ ஒரு ரூலாம், திருப்பி அனுப்பிச்சுட்டாரு. இருபது ரூபாய் இவன் அங்கே சம் பாதிச்சான்னு அவன் கிட்டே கொடுத்து அவனேயும் அனுப் பிச்சுட்டாரு. காலே ரெயில்வே போலீசாரு எங்க ஆபீசிலே அழைச்சாந்து உட்டாரு. கதை எல்லாம் சொன்னுரு."

"எப்பிடி சம்பாரிச்சானும்?" என்று மாங்கொட்டை குறுக்கிட்டான்.

"அங்கேயும் தையல் வேலேதான்."

"பணம் கிடக்குதுங்க. அவன் எங்கே இருக்கான்? பார்க்கணுமே."

"பெரிய துரை! இவளே அழைச்சுக்கிட்டுக் கொண்டு போய்க் காட்டுங்க" என்ற மாங்கொட்டை பழைய முருங்கை மரத்தில் ஏறினன்.

"தையல்காரரே, இந்த உடம்பெ வச்சுக்கிட்டு இவ் வளவு ரோஷம் பேசறதிலே என்ன புண்யம்? ஒன்னுலே தாக்குப் பிடிக்க முடியாதே."

"அவரு கிடக்காரு - பாக்கணுமே!"

"வேணும் வேணும். அவனே இப்பொ வருவான். புத்தியாப் பொழச்சுக்கங்க, தெரியுதா?"

ராஜாத்தி ரேழி வாசலே நோக்கினள்.

"இப்பொவா வருவான்? வரட்டும் வரட்டும்" என்று மாங்கொட்டை சொன்னபோது அவன் மனம் முழுவதும் சமாதானம் அடைந்த தொனி இல்லை.

போலீஸ்காரர் வாசல்பக்கம் போய்த் திரும்பி வந்த பொழுது பையனும் கூட வந்தான்.

"இத்தினி நேரம் வாசல்லியா நின்னுக்கிட்டிருந்தே?" என்று ஊகமாய்க் கேட்டான் மாங்கொட்டை.

அவன் பதில் சொல்லவில்லை. மூன்று ஆரஞ்சை எடுத்துத் தந்தை முன்பு வைத்துவிட்டு நின்றான். ராஜாத்தி மகனை வந்து கட்டிக்கொண்டாள். ஆனால் மாங்கொட்டை முகம் கறுத்தது. மாங்கொட்டைக்கு வந்தகோபம் திணறடி இருமலையும் சேர்த்து இழுத்துக்கொண்டு வந்துவிட்டது. இருமல் யாரையும் பேச விடவில்லை. புயல் ஓய்ந்ததுபோல் இருமல் அடங்கியது.

"தையல்காரரே, நான் வாரேன். ஒண்ணு சொல்றேன். சரிம்பியா? உங்ககிட்டே சொல்லிப்பிட்டுக் கூட்டிப் போவோம்னுதான் நானும் வந்தேன். எங்க சங்கத்திலே சின்னக் கைத்தொழில் பகுதி இருக்கு. அதிலே இவனை வச்சுக்கலாமுன்னு ஹெட் சொன்னாரு. சோறு சம்பளமெல்லாம் உண்டு, சரின்னா அழைச்சுக்கிட்டுப் போறேன். அவன் சரின்னுட்டான். என்ன சொல்றீங்க?"

"பேஷா அளச்சுகிட்டுப் போங்க" என்றாள் ராஜாத்தி, பையன் பிழைத்தால் சரி என்ற நினைப்பில்.

"அப்புறம் நான் என்ன ஆறதுங்க? அது எப்படி முடியும்?" என்றான் மாங்கொட்டை - தன் பிழைப்பைப்பற்றிய கவலையில்.

போலீஸ்காரர் பேசாமல் ஒரு நிமிஷம் சிரித்துக்கொண்டு நின்றார். பிறகு பையனை முதுகில் தட்டிக் கொடுத்துவிட்டு, வருகிறேன் என்று விடைபெற்றுக் கொண்டார்.